# குளித்தலை MVI மீனாட்சியின் மிரட்டல்...

## எஸ்.பி.யும் ஆட்சியரும் கவனிப்பார்களா?


# ஆணையர் நிர்மல் I.A.S.-ன் அதிரடிகள் பாயுமா?

பொருள் : கரூர் மாவட்டம் குளித்தலை RTO அலுவலகத்தின் பகுதி அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி மீனாட்சி, கரூர் பகுதியில் வசித்து வருகிறார். தனது அன்றாட பணிக்கான குளித்தலை அலுவலகத்திற்கு, காலை 10. மணிக்கு வரவேண்டிய இவர், 12 மணிக்குமேல் வருவதும், இவரால் நியமிக்கப் பட்ட புரோக்கர்களால், அன்றாட வாகன பணிக்காக வரும், அனைத்து பணிகளையும் இவரது, புரோக்கர்களே முடித்து விடும் நிலையில்தான் குளித்தலை RTO அலுவலகம் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக FCக்கு வரும் வாகனங்களை இவர் இயக்கி பார்க்கிற பட்சத்திலும், மற்றும் அரசின் TAB–ல் இவரே படம் பிடிக்கிற பட்சத்தில்தான், அந்த வாகனத்தின் தரைத்தளத்தில் இருந்து மற்ற ஸ்பேர்களின் தரத்தையும் வாகனத்தின் நிலைகளையும் துல்லியமாக அளவீடு செய்து அறிகிற நிலை ஏற்படும். ஆனால் இவர் எந்த ஒரு வாகனத்தையும் இயக்கி பார்ப்பதே இல்லை. இப்படியிருக்கையில் பெருகி வரும் விபத்துக்களை எப்படி தடுக்க முடியும்? மேலும், அந்தந்த வாகனங்களின் ஓட்டுனர்களையே இயக்க வைத்து இவருக்குரிய லஞ்சம் 1100 – வந்ததும் அந்த வாகனத்திற்கான தகுதிச் சான்றிதழ் அப்ரூவல் ஆகிவிடுகிறது. அதேநேரத்தில், அரசின்



இவர்தான் குளித்தலை மோட்டார் வாகன ஆய்வாளர் மீனாட்சி. கடந்த 18.8.2022ல் குளித்தலை அலுவலகத்தில் மேற்கொள்ள வேண்டிய பணி களை கரூர் அலுவலகத்தில் சீருடையும் தொப்பியும் இல்லாமல் பணியாற்றிய போது எடுத்த புகைப்படம். இந்தச் சம்பவத்தை வாய்மொழி மற்றும் எழுத்துப் புகாராக தெரிவித்து நடவடிக்கைக்குக் கோரி அலுவலக சிசிடிவி கேமராவில் இதற்கான ஆதாரம் உள்ளம் என தெரிவித்தால் “சிசிடிவி இயங்கவில்லை. புகாருக்கான ஆதாரமில்லை. அதனால் மேல் நடவடிக்கை தேவையில்லை” என சிலஉயரதிகாரிகளான சில விசாரணை அதிகாரிகள் நமது புகாரை வைத்து புகாருக்கு ஏற்ப 25,000, 50,000 என லஞ்சத்தைப் பெற்றுக் கொண்டு புகார் கோப்புகளை மூடி விடுகின்றனர். எனவே, உயரதிகாரிகளின் ஆதாரத்திற்காக இப்படி ஒரு புகைப்படம் எடுப்பது எப்படி தவறாகும்?

TAB–யை இவரால் இயக்கப்படுவது எப்போதுமே இல்லை. புரோக்கர்களை கொண்டு இயக்க வைப்பதும், அவர்களை கொண்டே பல்வேறு தகுதிகளுக்கான ஆய்வுகளை செய்வதும் போன்ற நிலைகளே தொடர்கிறபோது அந்தந்த வாகனங்களின் தரத்தை இவரால் எப்படி அறிய முடியும்? இதுபோன்ற பணிகளே விபத்துக்கள் பெருகுவதற்கு முக்கிய காரணமாகும். இப்படி, இவரது முறைகேடான பணிகள் தொடர்வது குறித்தும், புரோக்கர்களின் கைக்கு இவருக்கான லஞ்ச தொகைகள் கை மாறியதும், அந்தந்த கோப்புகளில் மீனாட்சி கையொப்பம் மட்டும் இட்டுவிட்டு, இடத்தை விட்டு நகர்வதும், மதியம் 3 அல்லது 4 மணிக் கெல்லாம் குளித்தலையிலிருந்து அவரது இருப்பிடமான (வீடு) கரூர் கிளம்பிவிடுவதும், அலுவலக நேரத்திற்கு உட்பட்ட




ஆய்வாளர் மீனாட்சியால் கேட்கப்பட்ட லஞ்சம் 1,100 ரூபாய்க்கு 700 ரூபாய் மட்டும் கொடுக்கப்பட்டதால் 1,100 வேண்டுமென மீனாட்சியின் கோரிக்கைக்குரிய வாகன நிர்வாகி ராமலிங்கத்தின் ஆடியோ பதிவு.

நேரங்களில் விபத்து வாகன அறிக்கையினை பெற வரும் வாகனங்கள் குளித்தலை அலுவலகத்திற்கு வந்த போதிலும், 3 மணிக்கெல்லாம் செக்கிங் போகிறேன் என பொய்யான தகவலை கூறிவிட்டு, ஆய்வாளர் மீனாட்சி கரூர் கிளம்பி விடுவதால், கரூர் பகுதிக்கு அந்த விபத்து வாகனங்களை எடுத்து வரச் சொல்லி, பொது மக்களுக்கு அதிக அலைச்சலையும், பொருட்செலவையும் ஏற்படுத்தி வருகிறார் என்பது போன்ற பல புகார்களும் நமக்கு வரப்பெற்ற நிலையிலும் மற்றும் கடந்த 16.08.2022ல் அரவக்குறிச்சி RTO அலுவலகத்திற்கு டெபுடேசன் பணியாக சென்ற மீனாட்சி TN.47 S 4144 டாரஸ் வாகனத்திற்கு தகுதிச்சான்றிதழ் வழங்குவதற்காக அனைத்து ஆய்வுகளை மேற்கொண்டபின், அரசால் வழங்கப்பட்ட TAB–லும், இவரது புரோக்கரால் படம்பிடித்து, வாகனத்தை பொதுச் சாலைக்கு அனுப்பிய பிறகு, FC –க்குரிய லஞ்சப்பணமான 1100 இவருக்கு கொடுக்கப்படாததாலும், அதற்கு குறைவாக ரூபாய் 700 கொடுக்கப் பட்டதால், அந்த பணத்தை திருப்பி கொடுத்து, ‘‘1100 – ருடன் வா, FC க்கு அப்ரூவல் கொடுக்கப்படும்’’ என முருகன் ஒட்டுனர் பயிற்சி பள்ளி கன்சல்டன்டிடம் கூறி, FC க்கான அப்ரூவல் செய்ய மறுத்ததோடு, அந்த வாகனத்தாருக்கு வழங்க வேண்டிய CFRR வழங்கப்படாமல், அதற்கான காரணங்களையும் தெரிவிக்காமல், அலட்சியப் பணிகளையே மேற்கொண்டு வருகிறார் மீனாட்சி என்றும், இவரால் விபத்துக்கள் பெருகும் எனவும் தெரிய வந்தது. மேலும்,




லஞ்சம் ஒன்றே குறிக்கோளாக செயல் பட்டு பணிபுரிந்து வருவதும், அவரது அலுவலக கணினியில் ஏற்றப்பட வேண்டிய ஆவணங்களை பதிவுக்கு கொண்டு செல்லாமல், ஊழலின் ஊற்றாகவே ஆய்வாளர் மீனாட்சி செயல்பட்டுள்ளார் என்பதற்கு அலுவலக கணினி, அரசின் TAB, மற்றும் அலுவலக CCTV – காமிரா காட்சிகள், நம்மால் எடுக்கப்பட்ட புகைப்படம், வீடியோ, லஞ்சம் கேட்கப் பட்ட விவகாரத்தில் நாம் வாகன உரிமையாளர் ராமலிங்கத்திடம் நாம் பேசிய ஆடியோக்கள் மற்றும் நமது புலனாய்வு செய்திகள், மற்றும் 16.08.2022–அரவக்குறிச்சி RTO–ல் மீனாட்சியால் மேற்கொண்ட ஆய்வு பணிகளின் CCTV பதிவுகள், மற்றும் அவரால் அவரது கணனியில் ஏற்றப்பட்ட ஆவணத்திற்கான பதிவுகள், 16–08–2022லே, அரசுக்கு செலுத்திய கட்டண பதிவுகள் மற்றும் FCக்குரிய அப்ரூவலும் அங்கு மீனாட்சியால் பதிவு செய்யப்பட்ட பதிவுகள் மீனாட்சியால் கொடுக்கப்படாதபோது CFRR கொடுக்கப்பட வேண்டிய கணனியின் பதிவுகள் இல்லாததும், மீண்டும் 17–08–2022–ல் மற்றொரு ஆய்வாளர் ரவிசந்திரன் அவர்களால் மீண்டும் ஆய்வுகளை மேற்கொண்டு அவரால் FC வழங்கியதற்கான ஆதாரம் என இவரது முறை கேடான பணிக்கு மலைபோல் கோப்புகளை நம்மால் ஆதாரத்தோடு இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவை அனைத்தும் நம் கண் முன்னே விசாரணைக்குக் கோரப்படுகிறபோது இவரது லஞ்சத்திற்காக பொதுமக்கள் உயிர்ப்பலி ஆவது என தெரிய வந்தது.

எனவே, இந்தச் செய்தியினையும் இப்படி நம்மால் ஆராய்யப்பட்ட, அனைத்து ஆதாரத்துடன் இருக்கும் சங்கதிகளையும் (என்னால்) நான் வெளியிடக் கூடாது என எங்களை மிரட்டியும், அதுவும் இந்த செய்தியினை அவரது உயர் அதிகாரிகளிடமே கூறி நமது கவனத்திற்கு கொண்டு வந்து மிரட்டி வருவதை என்னவென்று சொல்வது ? (ஆதாரம் : ஆடியோ) இப்படி எங்களால் எந்த ஒரு செய்தியும் நாங்கள் வெளியிட மாட்டோம் என எங்களிடமே எழுதி தரகோரியும் எங்களை மிரட்டி வருவதோடு, அப்படி எழுதி தராத பட்சத்தில்,

எங்கள் மீது கரூர் போலிசாரால் வழக்கு பதியப்படும் என ‘ஆய்’வாளர் மீனாட்சியால் தற்போதுவரை நாம் மிரட்டப்பட்டு வருகிறோம்.


எனவே, எமது ஊடகவியாளர் மீது ஆய்வாளர் மீனாட்சியால் கொடுக்கப்பட்ட புகாரை சீர்தூக்கி பார்ப்பதோடு, இவர் மீது எம்மால் திரட்டப்பட்ட குற்றச்சாட்டுகளின் உண்மைகளையும் தாங்கள் அறிந்து, அதன் பிறகே மீனாட்சியால் கொடுக்கப்பட்ட அந்த பொய்யான புகாரை ரத்து செய்வதோடு, அடித்து, செல்போனையும் உடைத்ததற்காக ஆய்வாளர் மீனாட்சி மற்றும் அவரது கணவர் மீதும் வழக்கு பதிந்து உரிய நடவடிக்கை எடுப்பதோடு அவரிடம் இருந்து எங்களுக்கான புதிய கைப்பேசியினையும் பெற்றுத்தர கோருவது தொடர்பாக.....



குளித்தலை அலுவலகத்தில் செய்யவேண்டிய பணியை கரூர் அலுவலகத்தில், செய்தபோது எடுத்த புகைப்படம்.

அய்யா, மேற்கண்ட முகவரியில் வசிக்கும் மூத்த பத்திரிகையாளரான நெல்லை கோபால்—ன் பணிவான வணக்கங்கள்.

கரூர் மாவட்ட காவல் முகநூலில், மூத்த பத்திரிகையாளரான நெல்லை கோபாலை பற்றி சில அவதூறான புகார்கள் பதிவிடப்பட்டு அதனை வைரலாக்கி வருகின்றனர், போக்குவரத்து துறை சார்ந்த RTO அலுவலக ஊழல் அதிகாரிகள் **மற்றும் இவர்களுக்கு துணை போன சில காவலர்களும்.**






கரூர் மாவட்ட போலீஸ் வலைதளத்தில் பொய்யாக பதிவிட்டு பரப்புரையாக்கப்பட்ட பதிவு.
இதனை ஆய்வாளர் மீனாட்சி மற்றும் சகஊ பூங்குழலியின் தூண்டுதலின்பேரில் ஒரு காவலரால் செய்யப்பட்ட பதிவு.

அதாவது, குளித்தலை காவல் நிலையத்தில் நெல்லை கோபாலகிய என் மீது ஒரு புகார் அளிக்கப்பட்டிருப்பதாகவும், அவர் ஆய்வாளர் மீனாட்சியிடம் பணம் கேட்டு மிரட்டியதாகவும் பதிவிடப்பட்டு, அவரை கைது செய்து அரசு ஊழியர்களுக்கு பாதுகாப்பு தருமாறு கேட்டுக் கொள்கிறோம். என்று பொய்யான ஒரு கோரிக்கையினை பதிவிட்டு அந்த தகவலை பரப்பிவரும், போக்குவரத்து ஊழல் அதிகாரிகளோடு கைகோர்த்த, விபத்து வாகனத்திற்கான ஆய்வறிக்கையினை பெற வந்த காவலர் WPC Mrs ரோகின் மற்றும் கரூர் ஆர்.டி.ஓ. அலுவலகத்திலிருந்து விபத்து அறிக்கை பெற வந்த சில காவலர்கள் மூலமாக தவறுகளை தட்டி கேட்கும் ஊடகவியாளருக்கும், அவர்களது நிர்வாகிகளின் அதிரடியான, நேர்மை யான பணிக்கும் ஒரு களங்கத்தை உண்டு பண்ணி வருகின்றனர்.

மேலும் அந்த தவறான தகவல் பற்றி குளித்தலை RTO அலுவலக மோட்டார் வாகன ‘ஆய்’வாளர் மீனாட்சி, மற்றொரு அதிகாரியான சென்னை RTO செயலாக்க பிரிவில் பணியாற்றும் பூங்குழலி ஆகியரோடும், மற்றும் குளித்தலை பகுதிக்குள் நடந்த விபத்து குறித்து, விபத்தான வாகனத்தோடு **மற்றும் விபத்து வாகனங்கள் இல்லாமலும்** ஆய்வறிக்கை பெற வந்த, Mrs. ரோகின் WPC மற்றும் சில காவலர்களாலும், கரூர் மாவட்ட காவல் வலை தளங்கள், மற்றும் வாட்ஸ் ஆஃப்கள் மூலமாக பொய்யான செய்திகள் பதிவிடப்பட்டு வைர லாக்கி வருகின்றனர். **இவர்கள் குறிப்பிட்டதுபோல் குளித்தலை காவல் நிலையத்தில் நெல்லை கோபால் மீது வழக்குப் பதிவாகி உள்ளது என்பதை நிரூபிக்க முடியுமா?**

மேலும், குளித்தலை RTO —ல் பணியாற்றிவரும், வாகன ஆய்வாளர் மீனாட்சி, அரசின் உத்தரவுகளான போக்குவரத்து விதிகளை மீறி 5.45—மணிக்கு மேல் விபத்துக் குள்ளான ஆய்வுகளை செய்துள்ளார். அதாவது சூரியன் உதயத்திற்கு பின்பும், சூரியன் மறைவுக்கு முன்பும் விபத்துக்களுக்கான வாகனங்களை ஆய்வு செய்து அதற்கான அறிக்கை வழங்கிவிட வேண்டும் என்பது கடந்த 20 வருடங்களுக்கு முன்பே அரசால் போடப்பட்ட ஒரு உத்தரவு. அதாவது மாலை 5.45க்கு மேல் விபத்தான வாகனங்களை ஆய்வு செய்யக் கூடாது என்ற ஆணையரின் உத்தரவுகள் இருக்கிற பட்சத்தில், இவரது விதிமீறலான



போக்குவரத்து துறை

அனுப்புநர்
திரு. S. நடராஜன் இ.ஆ.ப.,
போக்குவரத்து ஆணையர்,
போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு
ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை–05.

பெறுநர்
1. அனைத்து சரக அலுவலர்கள்,
2. அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள்,
3. அனைத்து பகுதி அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர்கள்,
4. அனைத்து சோதனைச் சாவடிகள்

11246/RA1/2022 நாள் 13.04.2022

(சுற்றறிக்கை எண் 32/2022)

பொருள்: பொதுப் பணிகள் – போக்குவரத்து துறை அலுவலகங்களுக்குள் இடைத்தரகர்கள், வெளி நபர்கள், ஓட்டுநர் பயிற்சி பள்ளி பணியாளர்கள் – அனுமதிப்பதை தடை செய்தல் – உத்தரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: போக்குவரத்து துறை, சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்கள். 45/91, 35/99, 100/98, 17/2000, 38/2002, 49/2022, 26/2003, 24/2005, 6/2009, 6/2013, 1/2015, 15/2018, 30/2021, 32/2021 மற்றும் 63/2021.

*******

போக்குவரத்து துறை அலுவலகங்களில் இடைத்தரகர்கள் மற்றும் வெளிநபர்களை அனுமதிக்கா வண்ணம் செயலாற்றுமாறு பார்வையில் கண்டுள்ள சுற்றறிக்கைகள் மூலமாக அறிவுரைகள் வழங்கப்பட்டன. இருந்த போதிலும் இச்சுற்றறிக்கைகளை முறையாக பின்பற்றாத காரணத்தினால் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திற்கு அதிகப்படியான புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. மேலும், அரசிடமிருந்தும் இப்பொருள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, இதுகுறித்து பின்வரும் அறிவுரைகள் மீண்டும் வழங்கப்படுகிறது.

1. ஒவ்வொரு அலுவலகத்திலும் பொதுமக்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாகவும், அலுவலகங்களுக்கு வரும் பொது மக்களுக்கு உரிய விவரங்கள் வழங்க வேண்டியும் மக்கள் தொடர்பு அலுவலர் ஒருவரை நியமிக்க வேண்டும். அவர் அலுவலகத்தின் முன்புறம் அமர்ந்து அலுவலகத்திற்கு வரும் பொது மக்களுக்கு பொறுப்பாகவும், கனிவாகவும், பணிவாகவும் பதில் அளித்து அவர்களுடைய பணிகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மூலமாக விரைவில் முடித்து கொடுக்க ஆவன செய்ய வேண்டும். வட்டாரப் போக்குவரத்து அலுவலர்/நேர்முக உதவியாளர்

– 2 –

இருவரில் ஒருவர் கண்டிப்பாக காலை 10.00 மணி முதல் மதியம் 01.00 வரை அலுவலக வாயிலில் இருந்து அலுவலகம் வரும் பொது மக்களுக்கு பணிகள் தங்கு தடையற்று நடக்கிறதா என உறுதி செய்ய வேண்டும்.
2. ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மற்றும் புதிய ஓட்டுநர் உரிமம் வழங்குதல் தொடர்பான பணிகளை துரிதமாக முடிக்க தேவையான அளவிலான (Optimum number of slots) பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.
3. அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் கட்டாயம் பணியாளர் அடையாள அட்டை அணிந்து பணிபுரிய வேண்டும்.
4. வாகனப் பதிவிற்கு வரும் வாகன விற்பனை முகவர்கள் மற்றும் ஓட்டுநர் தேர்விற்கு வரும் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி உரிமையாளர்கள் / ஓட்டுநர்கள் [illegible] அட்டையுடன் மட்டுமே அலுவலகத்திற்கு [illegible] அனுமதிக்க வேண்டும்.
5. இடைத்தரகர்கள், வெளிநபர்கள் யாரும் அலுவலகத்திற்குள் கண்டிப்பாக நுழைய அனுமதிக்கக் கூடாது.
6. மோட்டார் வாகன ஆய்வாளர்கள் பணியின்போது கட்டாயமாக சீருடை அணிந்திருக்க வேண்டும்.

எனவே, அனைத்து [illegible] அலுவலர்களும் மேற்கண்ட அறிவுரைகளை உரிய முறையில் கண்காணித்து பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், அனைத்து சரக அலுவலர்களும் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அலுவலகங்களுக்கு அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு போக்குவரத்து ஆணையர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவுரைகள் பின்பற்றப்படுகின்றனவா என கண்காணிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இதில் ஏதும் சுணக்கம் ஏற்படுமாயின் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், இச்சுற்றறிக்கை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை அனைத்து சரக அலுவலர்களும் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அலுவலகங்களில் இருந்து பெற்று அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஒம்) S.நடராஜன்,
போக்குவரத்து ஆணையர்,
சென்னை–05.

//உண்மை நகல்//

இணைப் போக்குவரத்து ஆணையர்(நி), 13/04
சென்னை–05.

போக்குவரத்து துறை அதிகாரிகளின் பணிகளுக்குரிய நடைமுறைகளுக்கான அரசு உத்தரவு. இதில் 5ல் இடைத்தரகர்கள் இருக்கக்கூடாது என்றும், 6–வது வரிசையில் கட்டாயமாக சீருடை அணிய வேண்டும் என்ற உத்தரவுகள் இருக்கிறபட்சத்தில் புரோக்கர்கள் புடைசூழ சீருடை இல்லாமல் பணியாற்றும் இந்த ஆய்வாளரின் முறைகேடான பணியை ஆதாரத்திற்காக புகைப்படம் எடுப்பதில் என்ன தவறு?

பணிகளை வீடியோ எடுக்காமல் எப்படி நிரூபிக்க முடியும்? (ஆதாரம் நமது ஊடகவியாளர் எடுத்த வீடியோ)

மேலும், அந்த பணியினையும் கூட, தனக்குரிய குளித்தலை அலுவலகத்தில் செய்யாமல், மற்றொரு அதிகாரிக்குரிய அலுவலகமான கரூர் RTO – அலுவலகத்திலும், மற்றும் இவர் கரூரில் எந்த பகுதியில் வசிக்கிறாரோ (உள்ளாரோ) அந்த பகுதிக்கு வாகனத்தை எடுத்து வரச் சொல்லி வருவதையும் தொடர்ந்து செய்து வருகிறார் என்ற குற்றச்சாட்டுகளுக்குரிய இந்த தவறுகளை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அரசுக்கும் சுட்டிக்காட்டத்தான் உரிய ஆதாரத்திற்கு அப்படியொரு புகைபடங்கள் மற்றும் வீடியோவும் எடுக்கப் பட்டது.

மேலும், சில நேரங்களில் இவர் வெளியில் செல்லும் பகுதியிலும் கூட, அதாவது இவர் ஏதோ ஒரு வீட்டு விஷேங்களுக்கு செல்லும் இடங்களிலும், அல்லது கோவிலுக்கு செல்கிறபோதும், சினிமா தியேட்டர்களுக்கு செல்கிறபோதும், அந்த இடத்திற்கு வரச்சொல்லி உரிய ஆய்வுகளை செய்கிற மாதிரி ஒரு பவானையை செய்து விட்டு, அவசர அவசரமாக காவலர்கள் கொண்டு வந்த கோப்புகளில் கையெப்பம் இட்டு விட்டு, கல்லா கட்டி வரும் இவரை போல் உள்ள ஊழல் அதிகாரிகளின் குற்றத்தை நிரூபிப்பதற்கு வீடியோ எடுக்காமல் எப்படி சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்லமுடியும் என்பதை காவல் துறை அதிகாரிகளின் கனிவான பார்வைக்கே பணிந்து விட்டு விடுகிறோம்.

அதே நேரத்தில் அலுவலக CCTV காமிரா காட்சியில், இவர் களது விதி மீறலான பணிகளுக்கான காட்சிகள் உள்ளது என ஒரு ஆதாரமாக நாம் தெரிவித்தாலும், உயரதிகாரிகளால் அந்த CCTV காட்சிகளை கைப்பற்றி எந்த ஒரு நடவடிக்கை ளையும் குற்றம்சாட்டப்பட்ட, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது எடுப்பதில்லை. காரணம் சில ஊழல் அதிகாரிகள் கீழிருந்து மேல் வரை கவனிக்கும் லஞ்ச ஊழல்களும், ஒரு புறம் இருந்தாலும், CCTV காட்சிகள் இயங்கவில்லை அதற்காக ஆதாரத்திற்குரிய எந்த ஆவணங்களும் இல்லை என்பதால், அந்த புகார் மீது மேல் நடவடிக்கை ஏதும் தேவையில்லை என கோப்புகளை மூடி விடுகின்றனர். அந்த விசாரணை அதிகாரிக்கு தேவையான 25,000, அல்லது 50,000, என லஞ்சங்களைப் பெற்றுவிட்டு சில விசாரணை அதிகாரிகள் கோப்புகளை மூடி விடுவதால் இது போன்ற குற்றச் சாட்டுகளுக்கு தண்டனை வாங்கித் தர ஊடகதாரர்கள் எடுக்கப்படும் இந்த வீடியோக்கள்தான் ஆதாரமாக அமைகிறது. அதே நேரத்தில் இதையும் மீறி அவர் களது அலுவலக அரசின் காமிரா காட்சிகளை கைப்பற்ற தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் படி தகவல் கோரி CCTV காட்சிகளை கோரினாலும், அந்த பதிவுகள் அழிந்துவிட்டது, அல்லது, காமிரா பழதாகியுள்ளது, அல்லது ஏதாவது ஒரு காரணம் சொல்லி நமது கோரிக்கைகளை புறக் கணிக்கின்றனர்.

எனவே தவறிழைத்த அதிகாரிகளின் தவறை தண்டிக்க தவறும் அதிகாரிகள் மத்தியில், ஊடகத்தாரர்கள் இப்படித்தான் வீடியோ எடுத்து அதிகாரிகளின் தவறுகளை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. ஆனால் இதனை தடுப்பதற்காக இந்த ஊழல் அதிகாரிகளால், படம் எடுக்கும் ஊடகத்

தினரின் காமிராக்களான கைப்பேசிகளை பறித்து உடைப்பதும், அவர்களை அடித்து துன் புறுத்தி காவல் நிலையத்திற்கு சென்று சிறைபிடிக்க வைப் பதையும் இந்த மீனாட்சி போன்ற சில ஆய்வாளர் களும், மற்றும் போக்குவரத்து துறை அதிகாரிகள் சிலரும் தொடர்ந்து செய்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடதக்கது.

இதுபோன்ற அடாவடியான செய்கைகளை செய்துவரும் அதிகாரிகளுக்கு ஏற்ப, காவல் துறை யினரும் புகார் கொடுப்பவர் ஒரு அரசு அதிகாரி என்பதால், அதனை ஏற்பதோடு, அந்த அதிகாரி களிடம் உங்கள் மீது என்ன தவறுகள் உள்ளது, எதற்காக அவர் படம்பிடிக்கிறார் என்ற உரிய விளக்கங்களை அந்த அரசு அதிகாரிகளிடம் பெறாமலும், ஊடகத்தினரால் ‘தான்’ மிரட்டப்பட்ட தாக கூறப்படும் அந்த அரசு அதிகாரியிடம் இருந்து, மிரட்டப்பட்டதற்கான குரல் பதிவுக்குரிய ஆதாரங் கள் (voice recorder) அல்லது, அதற் கான வேறு ஆதாரங்கள் ஏதும் உள்ளதா என்ற உரிய பதிவுக் கான ஆதாரங்களை எதுவும் பெறாமலே, அவர் ஒரு அரசு அதிகாரி என்பதை மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொண்டு, அந்த ஊழல் அதிகாரிகளால் கொடுக்கப்படும் புகார்களை காவல்துறையினர் ஏற்று ஊடகவியாளரை சிறைப்பிடிப்பது தவறு என்பதை, துணை, இணை, மற்றும் காவல் கண்காணிப்பாளர் போன்ற உயர் அதிகாரிகள்தான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உணர்த்தவேண்டும் என்பதை பணிவான கோரிக்கையாக வைக்கிறோம்.

அதே நேரத்தில், புகார் கொடுக்கும் மீனாட்சி



ஊழலை வெளியுலகுக்கு கொண்டு வருவோரை


போலீசார் தொந்தரவு செய்யக்கூடாது

ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூலை 27: ஊழலை வெளி உலகுக்கு கொண்டு வரு பவர்கள் மீது வழக்கு பதிவு செய்து போலீசார் தொந்த ரவு செய்யக்கூடாது என்று

ஆனால், ஊழலை வெளி உல

போன்ற அரசு அதிகாரிகளால் குற்றம் சொல்லப் படும் ஊடகத்தார்கள் மீது, அவர் பேசிய மிரட்டலுக் கான ஆடியோ, வீடியோக்கள் என எதையாவது, காவல் நிலை யத்தில் ஆதாரமாக கொடுத்து நடவடிக்கைக்கு கோரினால், காவல் அதிகாரியும் வழக்கு பதிவதில் தவறில்லை. ஆனால், இவரது விதி மீறிய பணிகளோடு, சீருடை இல்லாத பணிகளை மேற்கொண்டு வரும், இந்த ஆய்வாளர் மீனாட்சி யின் அதிகார துஷ்பிரயோகத்தை நிரூபிப்பதற்காக, ஊடகவியாளர் எடுக்கும் வீடியோவில் என்ன தவறு



போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகம்

அனுப்புநர்:
துணை போக்குவரத்து ஆணையர் – I,
போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை 05

பெறுநர்:
வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்,
சங்கரன்கோவில்.

ந.க. எண்: 19496/ எல்3/2022 நாள்: 16.05.2022

பொருள்: போக்குவரத்து துறை – வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் சிசிடிவி கேமராக்கள் பொருத்துவது/ சரிவர இயங்கவில்லை தொடர்பாக புகார் மனு மீது நடவடிக்கை எடுப்பது – தொடர்பாக

பார்வை: திரு. நெல்லை கோபால், சென்னை – 78 அவர்களின் மனு நாள்: 10.05.2022

பார்வையில் காணும் கடிதத்தில் திரு. நெல்லை கோபால், அவர்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், சங்கரன்கோவில் அலுவலகத்தில் முறையாக சிசிடிவி கேமராக்கள் பொருத்தவில்லை என்றும் சரிவர இயங்கவில்லை என்றும் புகார் மனு அளித்துள்ளார். எனவே தாங்கள் அலுவலகத்தில் சிசிடிவி கேமராக்கள் சரியாக பொருத்தி அவை பதிவாகின்றதா என்று பராமரிப்பட வேண்டும்.

மேலும் சிசிடிவி கேமராக்கள் சரியாக இயங்கவில்லை என்றால் கீழ்க்கண்ட முகவரியை தொடர்புக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

திருவாளர். Zigma Technologies India (P) Limited.
HO: 747 Amara Complex. SKC Road, Erode – 638001
Cell: 9791933074/83

ஒம்/- கு. நெல்லையப்பன்,
துணை போக்குவரத்து ஆணையர் – I

நகல்:

1. அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகம் அவர்களுக்கு தகவல்களுக்காக அனுப்படுகிறது.

// உத்தரவின் படி//

நேர்முக உதவியாளர்
"S" பிரிவு

போக்குவரத்து துறை தலைமைக்கு, கடந்த 10.05.2022–அன்று என்னால் கொடுக்கப்பட்ட புகாரை தொடர்ந்து, CCTV காமிரா இயங்கவில்லை என்றால், உடனே நடவடிக்கை எடுக்க 16.05.2022–ல், ஆணையர் அலுவலகத்தில் இருந்து அனைத்து RTO அலுவலக அதிகாரிகளுக்கும் உத்தரவிட்ட நகல். இப்படியிருக்கையில் கரூர் அலுவலகத்தில் எப்படி CCTV காட்சிகள் இயங்காமல் போனது ?

உள்ளது என்பதை காவல் அதிகாரிகள்தான் சீர் தூக்கி பார்த்திட வேண்டும். மேலும், உயர்நீதிமன்ற நீதியரசரின் உத்தரவுகளில்கூட ஊழலை வெளிச் சத்திற்குக் கொண்டு வருவோர் மீது வழக்குகள் பதிந்து போலீசார் தொந்தரவு செய்யக் கூடாது என்ற உத்தரவுகளையும் வழங்கியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நமது புகார் சம்பந்தமாக RTO, DTC, போன்ற போக்கு வரத்து துறை உயர் அதிகாரி களும் காவல் நிலைய அதிகாரி களிடம் கைப்பேசியில் தொடர்பு கொண்டு, மீனாட்சியின் புகார் மீதான நட வடிக்கையை நிறுத்தி வையுங்கள், துறைக்கு ஒரு களங்கம் வேண்டாம், என்று கோரியதும் இதில் குறிப்பிடதக்க கூடியதாகும்.

அதேபோல், தற்போது மோட்டார் வாகன ஆய்வாளர் மீனாட்சியால், எமது ஊடகத்தாரிடம் இருந்து அடித்து உதைத்து பிடுங்கப்பட்ட, கைபேசி வீடியோவின் பதிவுகளைகூட அலுவலகத்தில் CCTV யில் பதிவான காட்சிகளை கூட ஆய்வாளர் மீனாட்சி யால் அழிக்கப்பட்டு விட்டதாகவும் தெரியவருகிறது.

(அதே நேரத்தில் பெரும்பாலான RTO அலுவலகங்களில் இவர்களது ஊழல் வெளியில் தெரிந்து விடக்கூடாது என காமராக்களை இவர் களே செயலிழக்க வைத்துள்ளனர் என்பதும் ஆய்வுக்கு எடுக்க வேண்டிய விஷயமாகும்.)

இனி நாம் CCTV – காட்சிகளை பார்வையிட கோரிக்கை வைத்தாலும் CCTV பழுதாகி விட்டது என்ற காரணத்தை சொல்ல இருக்கிறார்கள் என்ற தகவல்களும் நம்மை வந்தடைந்தது. அதேநேரத்தில் இது போன்ற சம்பவங்களில் இந்த ஊழல் அதிகாரிகள் இப்படியெல்லாம் சொல்வார்கள் என்பதை முன்கூட்டியே நாம் அறிந்ததால், கடந்த 10.05.2022 ல் தமிழகமெங்கும் உள்ள RTO அலுவலகங்களில் காமிராக்கள் செயல்படவில்லை என்று குறிப் பிட்டு நாம் புகார் கொடுத்த தோடு (பார்க்க – உத்தரவின் நகல்), சங்கரன் கோவில் RTO–ல் செயல்பட வில்லை என்பதை குறித்தும் புகார் அளித்தும், காமிராக்கள் செயல்படுவதற் கான நடவடிக்கைகளை எடுக்க புகார் கொடுத்ததின் தொடர்பாக, போக்குவரத்தின் தலைமை அலுவலக மான ஆணையரகத் தில் இருந்து, அனைத்து RTO அலுவலகத்திற்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பட்டு CCTV காமிராவை சரி செய்ய சொல்லி உத்தர விட்டும், இந்த கரூர் RTO அலுவலக அதிகாரிகள் ஏன் காமிராவை சரி செய்யவில்லை என்ற கேள்விகள் தான் எழும் நிலையில் இருந்தாலும், துரதிர்ஷ்டவச மாக RTO மற்றும் அவரது PA– வும் பதில் செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டு, ஆய்வாளர் மீனாட்சியால் இந்த அலுவலகத்திற்கு ஒரு களங்கம் ஏற்பட்டு விட்டது. (பார்க்க: நம்மால் கோரப்பட்ட புகார்க்கு ஆணை யரகத்தில் இருந்து CCTV – காமிரா செயல்படுவதற்காக அனுப்பப்பட்ட சுற்றறிக்கை)

எனவே தற்போது CCTV காட்சிகளை அழித்த ஆய்வாளர் மீனாட்சியின் கைங்கர்யத்தை அறிந்து, போக்குவரத்து துறை ஆணையரே நேரில் களம் கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரத்தில் CCTV பல நாட்கள் இயங்கவில்லை என்ற காரணங்கள் அளிக்கும் பட்சத்தில் அவைகள் உண்மையாக இருக்கின்ற பட்சத்தில் அவைகள் எதற்காக சரி செய்யப்படவில்லை என்பதை ஆணையரே நேரடி ஆய்வு செய்து, தவறுகள் ஆய்வாளர் மீதோ, அல்லது அலுவலக பணியாளர் கள் மீதோ இருக்கும்பட்சத்திலோ அல்லது, CCTV – காமிராவை பராமரிக்கும் ஜிக்மா – வின் அலட்சிய பணிகள்தான் காரணம் என்றால், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதோடு, காவல் நிலை யத்தில் மீனாட்சியால் கொடுக்கப்பட்ட பொய்யான மற்றும் தவறான புகார்களை முடக்குவதோடு, அந்த புகாரை ரத்து செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் உண்மை யிலேயே CCTV பழுதாகி இருந்து, RTO அதிகாரி களால் ஜிக்மா நிறுவனத்திற்கு உரிய புகார் அளித்தது தொடர்பாக Proof of Delivery Card இருக்கும்பட்சத்தில் அதற்கான நடவடிக்கைக்கு கோரிய நிலையில், ஜிக்மா நிறுவனத்தினரால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப் படாதபோது, அந்த ஜிக்மா நிறுவனத்தின் மீதும் கடும் நடவடிக்கைள் ஆணை யரக அலுவலகத்தால் எடுக்கப்பட வேண்டும்.


அது மட்டுமல்லாது, மோட்டர் வாகன ஆய் வாளரான மீனாட்சியின் இருப்பிட பகுதியான அலு வலகத்திற்குரிய இடத்திலிருந்து பணி செய்யாமல் இடம் விட்டு இடம் நகர்ந்தும், அவரது முறைகேடான விபத்து ஆய்வுக்கான பணிகளை சீருடை இல்லாமல் வேறு பகுதிகளில் அந்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறார் மீனாட்சி, என்பதற்காக எடுக்கப்பட்ட வீடியோதான் தற்போது கரூர் காவல்துறை வசம் இருக்கும் நமது ஊடக வியாளரால் எடுக்கப்பட்ட வீடியோ ஆகும்.

இது எப்படி தவறாகும் என்பதுதான் நாம் எழுப்பும் நியாயமான கோரிக்கைகளாகும்.

இதே போல், கரூர் நகரத்திற்குள் மீனாட்சியின் குடியிருப்பு பகுதியும் வருவதால், மீனாட்சியின் வசதிக்கேற்ப, தன்னுடைய அலுவலக பணிகளை, எந்த ஒரு உயர் அதிகாரியிடமும் தெரிவிக்காமல், அவர்களிடமிருந்து முன் அனுமதி பெறாமலும், அதாவது அதிகாரியின் 0/0 –க்கான உத்தரவுகளை RTO–விடம் இருந்து பெறாமலும்,அலுவலக கோப்புகளின் ரிஜிஸ்டரில், அந்த 0/0 – க்கான பதிவுகளை செய்யாமல், பொதுமக்களை கரூர் அலுவலகத்திற்கு வரவழைத்து, அங்கும் இங்கும் அலைக்கழித்தும் வரும் மீனாட்சியின் குற்ற நிகழ்வுகளை ஆதாரமாக நிரூபிப்பதற்கு எடுக்கப் பட்ட வீடியோவை, குற்றம் என மோட்டார் வாகன ஆய்வாளர் மீனாட்சியால் எப்படி கூற முடியும். எனவே இந்தப் புகாரை காவல்துறையினர் ஏற்றதும் முறைதானா என்பதையும் சீர்தூக்கி பார்த்து மீனாட்சியின் புகாரை ரத்து செய்ய வேண்டும்.

மேலும், மீனாட்சி தனது பணிகளை குளித்தலை அலுவலக வளாகத்திற்குள் செய்யாமல், அப்பட்ட மாக அரசு விதிகளை மீறி முறைகேடாக பணிகளை புரோக்கர்கள் படையோடு செய்து வருவதையும், தற்போது கரூர் RTO–லே இப்படி ஒரு விபத்துக்கான ஒரு ஆய்வை, MVI மீனாட்சி சீருடை இல்லாமல், மாற்றுடைகளை அணிந்து புரோக்கர்கள் புடைசூழ செய்துவரும் பணிகளை மேற்கொண்டு வருகிறார் என்பதற்கான சாட்சிகள்தான், எமது ஊடகவியாள ரான அரவிந்தனால் எடுக்கப்பட்டு, MVI மீனாட்சி யால் பறிக்கப்பட்ட வீடியோ மற்றும் புகைப்படங் களாகும்.

**குளித்தலை மோட்டார் வாகன ஆய்வாளர் மீனாட்சியால் TN47S4144 என்ற டாரஸ் வாகனத்திற்கு, கடந்த 16–08–2022–ல் FC வழங்குவதற்காக கேட்கப்பட்ட லஞ்சம் ருபாய் 1100 தரப்படாததால், அந்த வாகனத்திற்கு FC அப்ரூவல் செய்யப்படவில்லை. அதற்கு மறுநாள் மற்றொரு ஆய்வாளரால் 17.08.2022–ல் FC வழங்கப்பட்டதற்கான சான்றின் நகலும், மற்றும் மீனாட்சி லஞ்சம் கேட்கப்பட்டதிற்கு நம்மால் ஆதரத்திற்காக பதிவு செய்யப்பட்ட ஆடியோக்களின் பதிவுகளும் இணைப்பில். இப்படியொரு ஊழல் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய போலீசார், வாகன ஆய்வாளர் மீனாட்சியால் கொடுக்கப்பட்ட பொய்யான புகாரை கரூர் போலிசார் ஏற்பது சரிதானா? அது மட்டுமல்லாது, ஊழலையும், அவரது முறைகேடான பணியினையும் வெளி கொண்டு வரும் எமது ஊடகவியாளரை அடித்து, உதைத்து கொலை செய்து விடுவேன் என மிரட்டி கைப்பேசியை பிடுங்கி உடைத்து சிறை பிடித்ததோடு, அதற்கு ஆதரமாக இருந்த RTO அலுவலக CCTV காமிரா காட்சியையும் அழித்த இவர் மீது பதிய வேண்டிய வழக்கிற்கு, இவரால் பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரை காவல் அதிகாரிகள் ஏற்பதை சீர்தூக்கி பார்த்திட வேண்டும்.**




இதனை அறிந்த மீனாட்சி, ஊடகவியளாரான அரவிந்தனை தாக்கி, அவனது கையில் இருந்த செல்போனை பறித்ததோடு, அரவிந்தனையும், தனது கணவரை விட்டு வெட்டி கொலை செய்வேன் என மிரட்டியதோடு, அங்கு விபத்து ஆய்வறிக்கை யினை பெற வந்த WPC Mrs ரோகின் மற்றும் மற்ற காவலர்களின் உதவியோடு, அரவிந்தனை கரூர் காவல் நிலையத்திலும் ஒப்படைத்துள்ளனர்.

இந்த காட்சிகள் அனைத்தும் கரூர் RTO அலுவலகத்தில் பல புரோக்கர்கள் மற்றும் பொது மக்களோடு சில வழிக்கறிஞர்கள் இருக்கையில், அவர்களது முன்னிலையிலும் இந்த சம்பவம் நடை பெற்றுள்ளது. அது மட்டுமல்லாது RTO அலுவலக உட்புறம் மற்றும் வெளிப்புறம் உள்ள CCTV காட்சியிலும் இது பதிவாகி உள்ளது.

இதனை அறிந்த நாம், கரூர் காவல் நிலை யத்திற்கு சென்று, மீனாட்சியின் விதிமீறிய பணிகளுக்கான நடவடிக்கை களையும், உயர் காவல் அதிகாரிகளிடமும் அவரது துறைசார்ந்த DTC , RTO ஆகிய உயரதிகாரிகளிடமும் மீண்டும் ஒரு முறை கைபேசி மூலமாக சில ஆதாரங்களைப் பதிவு செய்து, நமது விபரத்தை தெரிவித்ததோடு, மீனாட்சியின் மீது உள்ள குற்ற நடவடிக்கை யின் ஆதாரத்திற்காகத் தான் மேற்கண்ட இந்த வீடியோ எடுக்கப்பட்டது என்றும் விளக்கமாக தெரிவித்த தோடு, வாகன ஆய்வாளரான மீனாட்சியால் பறி முதல் செய்யப்பட்ட அந்த வீடியோ காட்சியுடனான நமது ஊடகவியளாரின் செல்போனை யும், நாம் கரூர் காவல் நிலையத்தில் இருந்து திரும்ப பெற்று வந்ததோடு அரவிந்தனையும் அழைத்து கொண்டு சென்னை திரும்பினோம்

மேலும், இதுகுறித்து வாகன ஆய்வாளர் மீனாட்சியின் உயர் அதிகாரியான திருச்சி DTC, மற்றும் கரூர் RTO அவர்களிடமும் புகாராக தெரிவித்து விட்டு வந்தாலும் கூட, இதுவரை ஆய்வாளர் மீனாட்சி மீது எந்த ஒரு நடவடிக்கையும் போக்கு வரத்து துறை அதிகாரிகளால் எடுக்கப்படவில்லை. அதே நேரத்தில் அன்றைய நாளில் 19.08.2022–ன் கோகுலாஷ்டமியை முன்னிட்டு அன்று தொடங்கி அரசு அலு வலகங்கள் தொடர் விடுப்பு என்றாலும், தமிழகமெங்கும் உள்ள போக்குவரத்து அதிகாரிகள் வாகன சோதனையில் இருக்கிற போது, மீனாட்சி மட்டும் தனது உயர் அதிகாரியிடம் முறைப்படி எழுத்து ஆவணம் மூலம் எதையும் பதிவு செய்யாமல், மாநிலம் விட்டு மாநிலம் தாண்டி கர்நாடாக மாநிலத்திற்கு பயணித்துள்ள தும் தெரியவந்தது.

அது மட்டுமல்லாது 18.08.2022–ல் மாலை 6 மணிக்குமேல் கரூர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட மீனாட்சி யின் புகாருக்கு 19.08.2022 காலையில் கரூரில் ஆஜரான நாமும், உரிய நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரினோம், காவல் அதிகாரிகளும், DTC, RTO அதிகாரி களும் இது சம்பந்தமாக மீனாட்சியை காவல் நிலையம் வரவழைப்பதற்காக மீனாட்சியின் கைப்பேசி எண்ணிற்கு அழைப்பு விடுத்தும், அன்றைய நாள் முழுக்க மீனாட்சியின் கைப்பேசி ரிங் ஆகி கொண்டே இருந்ததே தவிர அவர் யாரது அழைப்பையும் ஏற்கவில்லை. அதாவது இவரது கைப்பேசியை கரூரி லேயே விட்டுவிட்டு இவர் பெங்களூ ருக்கு பயணமாகிவிட்டார் என்று தெரியவந்தது.

அதாவது, ஆய்வாளரின் தவறான மற்றும் பொய்யான புகார் என்பதால்

அதற்கான நடவடிக்கையை ரத்து செய்ய, மீனாட்சியின் கைப்பேசிக்கு 18 மற்றும் 19–ம் தேதி முழுக்க இரவு வரை காவல் நிலைய உயர் அதிகாரிகளும், DTC, RTO ஆகியோர் தொடர்பு கொண்டும் ஆய்வாளர் மீனாட்சியின் தொலைபேசி எண் ரிங் ஆகி கொண்டே இருந்ததே தவிர ஆன் செய்யப் படவே இல்லை. இதற்கு சாட்சிகளும் அந்தந்த அதிகாரிகளே.

அதாவது அதிகாரிகளின் எதிர் குரலின் அழைப்புக்கு மீனாட்சி இசைந்து வரவில்லை. அதே நேரத்தில் 18–ம் தேதி இரவு 'தான்' (மீனாட்சி) நாளை பெங்களூர் செல்ல இருப்பதாக ஒரு தகவலை RTO விற்கு போன் மூலமாக தகவல் தந்துள்ளாரே தவிர அதனையும் முறைப்படி மனுவாக அளித்து உத்தரவு பெறவில்லை. தலைமையிடத்தை விட்டு ஒரு அதிகாரி வெளியில் செல்லும்போது தனது உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்று அதற்குரிய ஒப்பதல் ஆவணங்களை அலுவலக கோப்புகளில் பதிவு செய்து விட்டு செல்ல வேண்டும் என்பதை கூட மீனாட்சி அரசின் விதியின்படி செய்யப்படவில்லை. தனது அதிகாரியான RTO –வை அலட்சியப்படுத்தி விட்டு பெங்களூர் பயணித்துள்ளார். என்பதால்தான், கரூரில் உள்ள அவரது கைப்பேசி ரிங்கின் போது அவரால் அந்த அழைப்பை ஏற்க முடியவில்லை, என்பதையும் மேற்கண்ட RTO, DTC அதிகாரிகள் மூலமாகவே, நாம் அறிந்ததால், மாநிலம் விட்டு மாநிலம் தாண்டி ஆய்வாளர் செல்வதற்கான முறையான உத்தரவுகளும், அதற்கான அலுவலக கோப்புகளில் பதிவு செய்யப்பட்ட பதிவுகளும், அதற்கான அனுமதிக்குரிய பதிவுகளும் இல்லை என்பதையும் நாம் அறிந்ததோடு, அதற்கான உரிய நடவடிக்கைக்கும் நாம் அப்போதே பதிவும் செய்தோம். ஆனாலும், அவர் அன்று இரவு பணிக்கு வந்ததாக சில போக்குவரத்து அதிகாரிகள் மீனாட்சிக்கு ஆதரவாக நம்மிடம் பேசினர்.

ஆனால், அவர்களது பேச்சில் நம்பக தன்மை இல்லை என்பது நமக்கு தெரிய வந்தது என்றாலும், அன்று இரவு மீனாட்சி பணி செய்ததற்கான ஆய்வக புஸ்தகத்தையும், அவர் பணிபுரிந்த பகுதியின் CCTV காமிரா காட்சியினையும் தேதி வாரியாக ஆய்வு செய்து அவரது நாட்குறிப்பு டைரியினையும், ஆய்வுக்குட்படுத்தி, நேர்மையான அதிகாரிகள் கொண்டு விசாரிக்கப்பட்டால், மீனாட்சியின் பணிகளில் நடந்த முறைகேடுகள் அனைத்தும் வெளிவரும்.

அது மட்டுமல்லாது இவரது நாட்குறிப்பு டைரிகளில் இவர் பதிவு செய்த பதிவுகளை ஆய்வுக்கு எடுத்து, இவர் குளித்தலை அலுவலகத்திற்குரிய அலுவல் நேரத்திற்கு வராத போதும், அலுவல் நேரம் முடியும் நேரத்திற்கே முன்பே கரூர் சென்று விடுவதற்கும்கூட, செக்கிங்கிற்கு சென்றேன். வாகன சோதனையின் ஆய்வில் நின்றேன், ஈடுபட்டேன், என்று பொய்யான தகவல் களை குறிப்பிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அதே நேரத்தில் அந்த வாகன சோதனைக்கான நேரங்களை எல்லாம் கணக்கில் எடுத்து அந்த கால நேரங்களில் இவரால் எத்தனை செக் ரிப்போர்ட் போடப்பட்டுள்ளது என்றும், அந்த நாட்களில் எல்லாம் இவரால் அரசுக்கு ஈட்டிய வருமானம் என்ன ? என ஆணையரே நேரடி ஆய்வுக்குள் இறங்கினால் இவரது நாட்குறிப்பு டைரி ஒன்றே, இவரது முறைகேடான பணிகளை விவரிக்கும். அதனால் மீனாட்சியும் அதிரடி ஆணையரால் உடனே பணியிடை நீக்கமே செய்யப்படுவதும் உறுதியாகும்.

அது மட்டுமல்லாது TN47 S 4144 வாகனத்திற்கு தகுதிச் சான்றிதழ் வழங்குவதற்காக கணினியில் பதிவேற்றப்பட்ட ஆவணங்களையும், TAB–ல் எடுக்கப்பட்ட படங்களை ஆய்வு செய்தும், மீண்டும் மறுநாள் 17–08–2022–ல் நடந்த ஆய்வுகளையும் கணினியில் ஏற்றப்பட்ட தகவல்களையும் முறையாக ஆய்வு செய்தாலும், மீனாட்சியின் 400 ரூபாய் லஞ்சத்திற்காக பல பேர்களது வாழ்க்கைக்கு இவரால் எப்படி 'சூனியம்' வைக்கப்பட்டிருக்கும் என்பது நிரூபணமாகும். நல்லவேளை மீனாட்சியால் வைக்கப்பட்ட 'சூனியம்' எடுபடாமல், அதாவது FCக்கு அப்ரூவல் கொடுக்கப்படாமலும் அதற்கான தகவலை தெரியப்படுத்தாமலும் இருந்தாலும், CFRR கொடுக்கப்படாமல் இருந்ததாலும், அந்த வாகனம் பொதுச்சாலையில் இயங்கியபோது ஏதோ விபத்திற்குள்ளாகாமல் தப்பியது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

அந்த வாகனத்தில் ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டிருந்தால், இவருக்கான கூடுதல் லஞ்சம் பணமான 400 ரூபாய் தரப்படாததால், தகுதிச் சான்றிதழ்க்கான அப்ரூவல் செய்யப்படாத காரணத்தால், அந்த வாகனத்தில் பலியான வருக்கும், அந்த வாகனத்திற்கும் எப்படி இழப்பீடுகள் கிடைத்திருக்கும் ? இதனால் அந்த வாகன நிர்வாகியின் வாழ்வாதரமே ஸ்தம்பித்து அல்லவா போயிருக்கும் ? இப்படி அநியாயத்திற்கு லஞ்சம் வாங்கி முறைகேடான பணிகளை செய்து, அடுத்தவர்களின் வாழ்க்கையில் விளையாடும் இவர்களை அடையாளம் காட்ட, ஒரு ஆதாரத்திற் காக எடுக்கப்படும் வீடியோவும், புகைப்படமும், எப்படி தவறானதாகும் என்பதை கவனிக்க வேண்டிய அதிகாரிகள் கவனித்து முறையான நடவடிக்கைகளை எடுப்பதே போக்குவரத்து துறையை சிறப்படைய செய்யும்.

இப்படி பல முறைகேடுகளுக்கான உரிய ஆதாரத்திற்காகவே இந்த வீடியோ எடுக்கப் பட்டிருந்தாலும், இப்படி ஊடகத்தினர் வீடியோ



ஊழலை வெளியுலகுக்கு கொண்டு வருவோரை

# போலீசார் தொந்தரவு செய்யக்கூடாது

## ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூலை 27: ஊழலை வெளி உலகுக்கு கொண்டு வருபவர்கள் மீது வழக்கு பதிவு செய்து போலீசார் தொந்தரவு செய்யக்கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதிமுக ஆட்சியில் ஊழல் குற்றச்சாட்டுகளை பத்திரிகையில் வெளியிட்டது தொடர்பான வழக்கை ரத்து செய்யக் கோரிய மனு மீது சென்னை உயர் நீதிமன்றம் அளித்த உத்தரவு வருமாறு:

சட்டத்தைநிலைநாட்டும் போலீசார் குடிமக்களை பாதுகாக்க வேண்டும். குறிப்பாக அதிகாரத்தை பயன்படுத்தி ஊழல் செய்வோரை விட அந்த ஊழலை வெளிச்சத்துக்கு கொண்டு வருவோரை பாதுகாக்க வேண்டும். அதற்கு மாறாக ஊழலை வெளிச்சத்துக்கு கொண்டு வருவோர் மீது வழக்கு மேல் வழக்கு போட்டு அவர்களை கொடுமை செய்யக்கூடாது.

ஏராளமான ஆதாரங்களுடன் கொடுக்கப்படும் புகார்கள் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்வது இல்லை. ஆனால், ஊழலை வெளி உலகுக்கு தெரியப்படுத்துபவர்கள் மீதே வழக்குகளை போலீசார் பதிவு செய்கிறார்கள்.

போலீசாரை தங்களது பாதுகாவலர்கள் என்று பொதுமக்கள் நினைக்கின்றனர். அதற்கு மாறாக போலீசார், செயல்படக்கூடாது. வேலியே பயிரை மேய அனுமதித்தால் சமுதாயத்தில் அராஜகம் அதிகரித்து விடும். சட்டத்தின் ஆட்சி நடைபெறாது.

ஊழல் செய்தவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல் அதை வெளியுலகத்துக்கு கொண்டு வருபவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து தொந்தரவு செய்யக்கூடாது. இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க போலீஸ் அதிகாரிகளை உயர் அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**அரசு அதிகாரிகளின் பணிகளில் முறைகேடான மற்றும் ஊழல் பணிகளை வெளிகொணர கொண்டு வருவோர்க்கு எதிராக போலிசார் வழக்கு போடக்கூடாது என்பதற்காக, உயர்நீதிமன்றம் உத்திரவிட்டதற்கான பிரபல நாளிதழில் வெளிவந்த பத்திரிகை செய்தி. இப்படியிருக்கையில் வாகன ஆய்வாளர் மீனாட்சி மீது, பதிய வேண்டிய வழக்கை, பத்திரிகையாளர் மீது பதிவதற்கு வாகன ஆய்வாளர் மீனாட்சியால் ஆதராமில்லாமல் கொடுக்கப்படும் புகாரை காவல் அதிகாரிகள் ஏற்பது நியாயம்தானா ? சீர்தூக்கி பார்த்திட பணிந்து கோருகிறோம்**

எடுப்பதை தடுக்கவேண்டுமென்றே, தவறான பொய்யான குற்றச்சாட்டை காவல் அதிகாரிகளிடம் பதிவு செய்வது முறையற்ற செயல் என்பதை, காவல் நிலைய அதிகாரிகள் அறிந்து, மீனாட்சியின் புகாரை ரத்து செய்வதோடு, எமது ஊடகவியாளரை தாக்கியதற்காகவும், அவரை ஊடக பணிகளுக்கான நடவடிக்கைகளை செய்ய விடாமல், தடுத்து, விபத்து அறிக்கை பெற வந்த Mrs ரோகின் WPC காவலர் மற்றும் விபத்து அறிக்கையை அங்கு பெற வந்த சில ஆண் காவலர்களாலும் சிறை வைத்ததற்கு, மோட்டார் வாகன ஆய்வாளரான மீனாட்சி மீது வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும். ஏனெனில், மீனாட்சியும், எமது ஊடகவியாளரை தாக்கி, செல்போனை பறித்து உடைத்துள்ளார். அது மட்டுமல்லாது மீனாட்சி தனது வீட்டுக்காரரை ஏவிவிட்டு உன்னை வெட்டி கொலை செய்வேன் என பலரது முன்னிலையிலும், Mrs ரோகின் WPC மற்றும் சில ஆண் காவலர்கள் முன்னிலையிலும் கொலை மிரட்டல் விடுத்துள்ளார் மீனாட்சி.

மேலும், மீனாட்சி 18–08–2022–ல் கொடுத்த அந்த பொய்யான புகாருக்கு அன்று இரவே நாம் சென்னையில் இருந்து கிளம்பி 19.08.2022–ல் கரூர் –காவல் நிலையம் வந்து அஜராகியும், வாகன ஆய்வாளர் மீனாட்சி கரூர் காவல் நிலையம் வர வில்லை. அது மட்டுமல்லாது, 19–08–2022–அன்று முழுக்க நாம் காவல் அதிகாரிகளும், RTO, DTC ஆகியோராலும் பல பல தடவைகள் மீனாட்சியின் கைபேசிக்கு அழைப்பு விடுத்தும் ஒரு முறை கூட எந்த ஒரு அதிகாரியின் அழைப்பு களையும் அவரால் ஏற்கப்படவில்லை. அப்படி ஏற்கப்பட்டிருந்தால் உடனடியாக காவல் நிலையம் வரச் சொல்லி உத்திரவிட்டால், பெங்களூரில் இருக்கும் அவரால் எப்படி வரமுடியும் என்பதால் காவல் மற்றும் போக்கு வரத்து துறையின் RTO, DTC போன்ற அதிகாரிகளின் எந்த ஒரு தொலைத் தொடர்புகளையும் மீனாட்சியால் எதிர் கொள்ள முடியவில்லை.

இந்த சூழ்நிலையில், கருர் மாவட்ட குளித்தலை WPC Mrs ரோகின் மற்றும் ஆண் காவலர்களும் சேர்ந்து நடந்த நிகழ்வுகளை தவறாக சித்தரித்து கரூர் மாவட்ட போலீஸ் முகநூலில், நெல்லை கோபால் என்பவர் மீது குளித்தலை காவல் நிலையத்தில் வழக்கு பதிந் திருப்பதாக பொய்யான தகவல்களை, கரூர் காவல் முகநூலின் மூலமாக தகவல்கள் பரப்ப வைத்து வருகிறார் மீனாட்சி மற்றும் RTO பூங்குழலி.

எனவே அந்த தவறான பதிவை நீக்கிடவும், (பார்க்க – முகநூல் பதிவு – இணைப்பில்) அந்த பதிவை செய்தவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மற்றும், அரவிந்தனை தாக்கி கொலை மிரட்டல் விடுத்தற்கான வழக்குகளையும் மீனாட்சி ஆய்வாளர் மீதும், மற்றும் அவரது கணவரிடம் சொல்லி வெட்டி கொலை செய்வேன் என மீனாட்சி கூறி எமது ஊடகவியாளரை மிரட்டப் பட்டதால், அவரது கணவர் மீதும் உரிய வழக்கு பதிந்து உரிய நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகமும், அதிரடியான காவல் கண்காணிப்பாளரும், காவல் நிலைய அதிகாரிகளும் மேற்கொள்ள வேண்டும் என பணிந்து கோருகின்றோம். இது நடக்கும் எனவும் நம்புகிறோம்.

**நெல்லை கோபால்**
மூத்த பத்திரிகையாளர்
9994478389

31–08–2022